CENTRE FOR POLICY ALTERNATIVES

## ஆரம்பக் குறிப்பு

# அவசரகால நிலைப் பிரகடனம் மற்றும் அத்தியாவசிய வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பராமரிப்பதற்கான ஒழுங்குவிதிகள்

**செப்டெம்பர் 02,2021**

இந்த ஆவணம் பின்வரும் விடயங்களை சுருக்கமாக கலந்துரையாடும்:

i. அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யும் சட்டம் தொடர்பான சட்டகம்
ii. அவசரகால நிலையின் குறிக்கோள்கள் (அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடு) ஒழுங்குவிதி, 2021 இன் இல. 1 (அவசரகால ஒழுங்குவிதிகள்)
iii. இந்த அவசரகால ஒழுங்குவிதிகளில் உணவுப் பொருட்களின் வழங்கல்களை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டம்.
iv. உணவு கையிருப்புக்களை கைப்பற்றுவதற்கான தகுதி வாய்ந்த அதிகாரி
v. இந்த அவசரகால ஒழுங்குவிதிகள் உணவுப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பதனை ஒரு தவறாக ஆக்குகின்றனவா?
vi. தனிப்பட்ட சேவைகளை பெற்றுக்கொள்ளல்
vii. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அதிகாரங்கள்
viii. இந்த அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஓர் அத்தியாவசிய சேவை எனப்படுவது என்ன?
ix. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் பொழுது அதன் தாக்கம் என்ன?
x. சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்திருக்கக்கூடிய ஏனைய சட்ட ஏற்பாடுகள்.
xi. ஏனைய சட்டங்களுக்குப் பதிலாக, அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு சேவையை ஒரு அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

## பின்னணி

ஜனாபதி கோட்டபாய ராஜபக்ஷ இல. 2243/1, வர்த்தமானி ஊடாக திருத்தப்பட்டவாறான பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) பிரிவு 2 இன் கீழ் 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். இந்தப் பிரகடனத்தில் ஜனாதிபதி பின்வருமாறு கூறிப்பிடுகிறார்: *"தற்பொழுது இலங்கை எங்கிலும் வேகமாகப் பரவிவரும் கொவிட் - 19 பெருந்தொற்று பின்னணியில் நாட்டில் நிலவி வரும் அவசர நிலைமையை கருத்தில் கொண்டு, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நலநோம்பல், சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் பராமரிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவ்வாறு செய்வதற்கான அவசரம் ஏற்பட்டுள்ளது என நான் அபிப்பிராயப்படுகிறேன்."* அந்நியச் செலாவணி பற்றாக்குறைகள் காரணமாக தனியார் வங்கிகள் உணவு இறக்குமதிகளுக்கு நிதிப்படுத்தலை வழங்க முடியாதிருந்து வருவதாகவும், அந்த நிலையில் ஓர் உணவுத் தட்டுப்பாடு எதிர்பார்க்கப்படுவதாகவும் பரவலாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வரும் ஒரு சூழ்நிலையில் இடம்பெறுகிறது.[1]

---

[1] 1 'Sri Lanka declares food emergency as forex crisis worsens', Al Jazeera, 31st August 2021 https://www.aljazeera.com/news/2021/8/31/sri-lanka-food-prices-emergency-forex-crisis ; Damith Wickremasekara, 'Food

எவ்வாறிருப்பினும், உணவுப் பொருட்களின் தட்டுப்பாடுகள் எவையும் இருந்து வரவில்லை என்றும், வியாபாரிகள் கையிருப்புக்களை பதுக்குவதன் காரணமாக விநியோகம் தொடர்பான பிரச்சினைகள் இருந்து வருகின்றது என்றும் அரசாங்கம் கூறுகின்றது. அவசரகால நிலை ஒன்றை பிரகடனம் செய்வதற்கான சட்ட அடிப்படை மற்றும் குறிப்பாக, 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதியிடப்பட்ட இல. 2243/3 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 2021ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கான) ஒழுங்குவிதி என்பன குறித்து சுருக்கமான ஒரு விளக்கத்தை வழங்குவதற்கென மாற்றுக் கொள்கைகள் நிலையத்தினால் (CPA) இந்தக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2, இரண்டு நிலைமைகளின் போது அவசரகால நிலைமையை பிரகடனம் செய்வதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. அவ்வாறு செய்வதற்கான தருணம் வந்திருப்பதாக ஜனாதிபதி அப்பிராயப்படும் சந்தர்ப்பத்தில் -

1) பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு பராமரிப்பு என்பவற்றின் நலனைக் கருத்தில் கொண்டு அல்லது

2) சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள் வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பராமரித்து வருவதற்காக.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா 2018ஆம் ஆண்டில் நாட்டில் அவசரகால நிலையை பிரகடனம் செய்திருந்த பின்புலத்தில், அவசரகால நிலை ஒன்று தொடர்பான அரசியல் யாப்பு ரீதியான மற்றும் சட்ட ரீதியான நிலைமை குறித்தும், அது எடுத்து வரக்கூடிய விளைவுகள் குறித்தும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னர் ஒரு குறிப்பினை வெளியிட்டிருந்தது.[2] 2018ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட தொந்தளிப்பு நிலையை அடுத்தும், 2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை அடுத்தும் பிரகடனம் செய்யப்பட்ட முன்னைய அவசரகால நிலைமைகளைப் போலன்றி[3] தற்போதைய அவசர நிலைப் பிரகடனம் சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பாரமரித்து வருவது தொடர்பான இரண்டாவது கூறுடன் சம்பந்தப்பட்டதாகும். எவ்வாறிருப்பினும், அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதற்கான காரணம் என்னவாக இருந்து வந்த போதிலும், அத்தகைய ஒரு பிரகடனம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அது ஜனாதிபதிக்கு, வரையறுக்கப்பட்ட ஒரு சில பரீட்சிப்புக்கள் மற்றும் சமநிலைகளுடன் கூடிய விதத்தில் பரவலான அதிகாரங்களை வழங்குகின்றது என்ற விடயத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிட விரும்புகின்றது. 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதி அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதுடன் இணைந்த விதத்தில், எந்தவொரு விடயம் தொடர்பாகவும் எந்தவொரு நேரத்திலும் அவசரகால ஒழுங்குவிதிகளை கையாளுவதற்கான அதிகாரத்தை இப்பொழுது ஜனாதிபதி கொண்டுள்ளார். அவசரகால நிலை, பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்கள் மற்றும் அடக்குமுறை தொடர்பான வரலாறு என்பவற்றுடன் கூடிய இலங்கையின் வரலாற்றை கவனத்தில் எடுக்கும் பொழுது, இது பாரதூரமான கரிசனைகளை எடுத்து வருகின்றது. தற்போதைய ஒழுங்குவிதியின் அமுலாக்கம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் என்பவற்றை உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய தேவையிருந்து வருகின்றது.

## 2021 இன் அவசரகால (அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதல்) ஒழுங்குவிதி இல. 1

அவசரகால நிலையை பிரகடனம் செய்யும் அதே பிரகடனத்தின் மூலம் ஜனாதிபதி 2021 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அவசரகால (அத்தியாவசிய உணவுப்பொருட்களை வழங்கும்) ஒழுங்குவிதி அமுலுக்கு வரும் என்றும் பிரகடனம் செய்தார். இந்த ஒழுங்குவிதிகள் 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதியிடப்பட்ட இல.

---

rationing on the cards to ensure fair prices', The Sunday Times, 29th August 2021. https://www.sundaytimes.lk/210829/news/food-rationing-on-the-cards-to-ensure-fair-prices-453941.html

[2] Dr. Asanga Welikala, 'Understanding a State of Emergency: March 2018', Centre for Policy Alternatives, March 2018. https://www.cpalanka.org/understanding-a-state-of-emergency-march-2018/

[3] 'UNDERSTANDING EMERGENCY: EASTER SUNDAY ATTACKS 2019', Centre for Policy Alternatives, 2019. https://www.cpalanka.org/wp-content/uploads/2019/04/QA_SoE.pdf

2243/3 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன், 'அத்தியாவசிய சேவைகளை' முகாமைத்துவம் செய்வதுடன் சம்பந்தப்பட்ட சில ஏற்பாடுகளை அது கொண்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பல ஒழுங்குவிதிகள், பல ஆண்டு காலம் அமுலிலிருந்து வந்த 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒழுங்குவிதிகளைப் பெருமளவுக்கு ஒத்தவையாகவே இருந்து வருகின்றன.[4] இந்த ஏற்பாடுகள், அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைளையும் அமுல் செய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமனம் செய்வதற்கான ஏற்பாட்டைக் கொண்டுள்ளன (ஒழுங்குவிதி 9ஐப் பார்க்கவும்).

2021 ஆகஸ்ட் 30ஆம் திகதியிடப்பட்டு இல. 2243/5 வர்த்தமானியின் மூலம் மேஜர் ஜெனரல் நியுன்ஹல்லகே டொன் செனரத் பியசிறி நியுன்ஹல்ல[5] இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சிவில் நிர்வாக அதிகாரிகளை ஓரம் கட்டும் செயற்பாட்டின் மிகப் பிந்திய ஒரு நகர்வாக இந்த நியமனம் இருந்து வருகின்றது என்ற விடயத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுப்பதுடன், பொருளாதார நெருக்கடி ஒன்றின் போர்வையில் இராணுவமயமாக்கல் வேரூன்றச் செய்யப்பட முடியும் என்ற அச்சத்தை இது ஏற்படுத்தலாம் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றது.[6]

## ஒழுங்குவிதிகளின் குறிக்கோள்கள்

இந்த ஒழுங்குவிதிகளின் குறிக்கோள்கள் பின்வரும் விதத்தில் இருந்து வருவதாக கருதப்படுகின்றது: 'ஒழுங்கீனங்களை ஏற்படுத்துகின்றதும், பாவனையாளர்களுக்கும் பொது மக்களின் சேமநலத்திற்கும் வசதியீனத்தை விளைவிக்கின்றதுமான சந்தை ஒன்றை உருவாக்கி, அரிசியும், சீனியும் உட்பட்ட அத்தியாவசியமான தொகையான உணவுகளை ஒளித்து வைத்தல், அவற்றின் விநியோகத்தை இடையீடு செய்தல், உயர் விலைகளை விதித்தல் போன்ற செயற்பாடுகளை தடுப்பதாகும். ஆதலால், அதிகாரிமளிக்கப்பட்ட அலுவலர்கள் அல்லது அதிகாரிகள், உத்தரவாத விலையின் அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலைகளின் அடிப்படையில் நெல், அரிசி, சீனி உட்பட்ட தேவையான அத்தியாவசியமான உணவுகளை வாங்குவதனை செய்வித்தல் வேண்டுமென்பதுடன், பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்குதலும் வேண்டும். கடன் கொடுத்தோரிடமிருந்தும் அத்தகைய தொகைகளை வாங்குவதற்கு அரச வங்கிளிடமிருந்து பெறப்பட்ட கடன்களை அறவிடுவதற்கு அத்தகைய வங்கிகள் வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்' [ஒழுங்குவதிகள் 2ஐப் பார்க்கவும்].

எவ்வாறிருப்பினும், இந்த ஒழுங்குவிதிகளின் தொகுப்பை அவதானிக்கும் பொழுது, உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து, பொது மக்களுக்கு அவற்றை விநியோகம் செய்தவற்கு மட்டும் அந்த ஒழுங்குவிதிகளின் நோக்கம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை போல் தெரிகிறது. பாகங்கள் I மற்றும் III என்பன இந்த நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் இருந்து வருவது போல் தெரிவதுடன், ஒழுங்குவிதிகளின் பாகம் II 'அத்தியாவசிய சேவைகளை' முகாமைத்துவம் செய்வதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குகின்றது.

---

[4] Gregory Norton, The Emergency Regulations 2005, consolidated upto 2007, available at - https://www.refworld.org/pdfid/471712342.pdf

[5] 'Army Chief Recalls Battlefield Gains & Extends Best Wishes to Major General Niwunhella', Sri Lanka Army, January 2021. https://www.army.lk/news/army-chief-recalls-battlefield-gains-extends-best-wishes-major-generalniwunhella

[6] CPA has previously commented on the increasing militarisation, including of the Pandemic response. Bhavani Fonseka & Uvin Dissanayake, 'Sri Lanka's Vistas of Prosperity and Splendour: A Critique of Promises Made and Present Trends', Centre for Policy Alternative, July 2021. https://www.cpalanka.org/wpcontent/uploads/2021/07/Sri-Lankas-Vistas-of-Prosperity-and-Splendour-A-Critique-of-Promises-Made-andPresent-Trends.pdf

## உணவுப் பொருள் வழங்கல்களை முகாமைத்துவம் செய்வதற்கான அதிகாரங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்

**உணவுப் பொருள் வழங்கல்களின் முகாமைத்துவத்திற்கான திட்டம் என்ன?**

இந்த ஒழுங்குவிதியின் நோக்கம் உணவுப் பொருட்களின் வழங்கல் தொடர்பானதாக இருந்து வருவதாக தென்படும் அதேவேளையில், இந்த ஒழுங்குவிதிகளின் தொகுப்பு, 'அதிகாரிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கையிருப்புக்களை கொள்வனவு செய்யும்' நடைமுறை தொடர்பாக ஆழமாக வலியுறுத்தவில்லை என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுக்கின்றது. தெளிவான நடைமுறைகள் இல்லாத நிலையில் தன்னிச்சையான நடவடிக்கைகள் எடுக்கப்படக் கூடிய வாய்ப்புக் குறித்த கரிசனைகளை இது எழுப்புகின்றது.

நெல், அரிசி மற்றும் அத்தகைய பொருட்களை போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் என்பவற்றை பொது மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்கும் நோக்கத்திற்கென கைப்பற்றுவது அவசியமானது என தகுதி வாய்ந்த அதிகாரி கருதுமிடத்து, அந்த தகுதி வாய்ந்த அதிகாரி நெல் மற்றும் அரிசி என்பவற்றை, அத்தகைய பண்டங்களை போக்குவரத்துச் செய்யும் வாகனங்களையும் உள்ளடக்கிய விதத்தில் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளை இந்த ஒழுங்குவிதி கொண்டுள்ளது [பார்க்கவும் ஒழுங்குவிதி 12(1)]. அவ்வாறு செய்வது அவசியமானது  எனக் கருதும் பொழுது, தகுதி வாய்ந்த அதிகாரி அது தொடர்பாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை என்பது தொடர்பாக இந்தப் பிரிவு வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கவில்லை. அது பொது ஒழுங்கை பராமரித்து, பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு அவ்விதம் செய்ய முடியும்  என்பதனை கீழே உள்ளே பிரிவு உத்தேசிக்கின்றது.

நுகர்வோருக்கு இந்தப் பொருட்களை வழங்கும் பொழுது தகுதி வாய்ந்த அதிகாரி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் கீழ் 'அரசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விலைகளை அல்லது சுங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட விலைகளை' கவனத்தில் எடுக்க வேண்டும் என இந்த ஒழுங்குவிதிகள் விதித்துரைக்கின்றன [ஒழுங்குவிதி 12(2) ஐப் பார்க்கவும்]. உணவுப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கென பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் தொடர்பாகவும் தகுதி வாய்ந்த அதிகாரி கட்டளைகளை வழங்க முடியும் [ஒழுங்குவிதி 12(3) ஐப் பார்க்கவும்]. மேலும், ஒழுங்குவிதி 12 இன் கீழ் கருமங்களை மேற்கொள்ளும் பொழுது, ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் அல்லது அரசாங்க உத்தியோகத்தரின் உதவியையும் அவர் பெற்றுக்கொள்ள முடியும் [ஒழுங்குவிதி 12(4)ஐப் பார்க்கவும்].

**உணவுப் பொருட்களை கைப்பற்றுவதற்கான தகுதி வாய்ந்த அதிகாரி யார்?**

ஒழுங்குவிதி 6(1) 'தகுதி வாய்ந்த அதிகாரி' ஒருவரை நியமனம் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், அது பின்வருமாறு குறிப்பிடுகின்றது: *'ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்திற்காக, பொதுவாக இலங்கை முழுவதற்கும் அல்லது அத்தகைய ஆள் எந்த ஆவணத்தின் மூலம் நியமிக்கப்படுகின்றாரே அந்த ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்காக அல்லது இடத்திற்காக எவரேனுமாள் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படலாம். ஆயின். ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பின் அல்லது இடத்தின் ஏதேனும் நோக்கத்திற்காக தகுதி வாய்ந்த அதிகாரிகளாக இரண்டு ஆட்களை அல்லது அதற்கு மேற்பட்டடோரை நியமித்தலானது இவ் ஒழுங்குவிதியின் முற்போந்த எவையேனும் ஏற்பாடுகளினால் தடுக்கப்படுகின்றதாக கருதப்படலாகாது.'*

எவ்வாறிருப்பினும், ஒழுங்குவிதி 12(5), ஒழுங்குவிதி 12 இன் நோக்கத்திற்கென "தகுதி வாய்ந்த அதிகாரி" என்பது 'நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர், பொலிஸ் மா அதிபர் அல்லது ஏதேனும் ஒரு மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் எனப் பொருள்படும்' எனக் குறிப்பிடுகின்றது.

எனவே, ஒழுங்குவிதி 6 இன் கீழ் 'எந்தவொரு நபரையும்' தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமனம் செய்வதற்கான பரவலான அதிகாரம், பிரிவு 12(5) இன் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியாக யார் இருந்து வர முடியும் என்ற விடயத்தை திட்டவட்டமாக குறித்துரைத்திருக்கும் குறுகிய பிரிவு வரையறை செய்கின்றது.[7]

[7] The only instance in which a 'competent authority' is referred to in the Regulations are in reference to regulations 11 and 12, both of which specify who the authority must be. It thus raises questions whether clause 6, which is identical to clause 5 of the 2005 Emergency Regulations was a superfluous addition.

**உணவுப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பது ஒரு தவறாகுமா?**

உணவுப் பொருட்களை பதுக்கி வைப்பதை தெளிவாகவே ஒரு தவறாகக் குறிப்பிடும் எந்தவொரு ஏற்பாடும் இருந்து வரவில்லை. எவ்வாறிருப்பினும், ஒழுங்குவிதி 11(1) பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது : *'எவையேனும் இடப்பரப்புகள் இவ் ஒழுங்குவிதிகளின் கீழான தவறு ஒன்றை புரிவதற்கான அல்லது தவறு ஒன்றை புரிதல் சம்பந்தமாக பயன்படுத்தப்பட்டுள்ளதென சார்த்தப்படுமிடத்து, இயைபான இடப்பரப்பின் பொலிசுக் கண்காணிப்பாளர் நெல், அரிசி, சீனி உட்பட அத்தியாவசிய உணவுக் கையிருப்புக்களை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள அத்தகைய இடப்பரப்பை தனது உடைமையில் எடுத்தல் வேண்டுமென்பதுடன், அங்கு காணப்படுகின்ற அல்லது வதிகின்ற எவரேனும் ஆளை அப்புறப்படுத்துதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய இடப்பரப்பினுள் எவரேனும் ஆள் அதிகாரமில்லாமல் பிரவேசிப்பதை தடுத்தலும், அத்தகைய இடப்பரப்பை பாதுகாத்தலும் வேண்டும்.'* ஆகவே இந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அத்தகைய தவறு இருந்து வருகின்றது என்பதனை இது உத்தேசிக்கின்றது.

இந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வெளியிடப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு கட்டளையை மீறுவது அல்லது அதற்கு இணங்கியொழுகாதிருப்பது ஒரு தவறாகும் [பார்க்கவும் ஒழுங்குவிதி 13(2)]. எனினும், ஒழுங்குவிதி 12 இன் கீழ் வாகனங்களின் பாவனை சம்பந்தப்பட்ட ஒரு கட்டளையை வழங்குவதற்கான அதிகாரத்தை மட்டும் தகுதி வாய்ந்த அதிகாரி கொண்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கையிருப்புக்களை பதுக்கி வைத்திருப்பது தொடர்பாக கட்டளைகள் வழங்கப்பட முடியும் என்பது குறித்த எத்தகைய குறிப்புக்களும் அங்கு காணப்படவில்லை. இந்தத் தவறு ஒழுங்குவிதி 12(1) இன் கீழ் தேவையான உணவுப் பொருட்களை கைப்பற்றுவதற்கான தகுதி வாய்ந்த அதிகாரியின் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டதாக கருதப்பட்டிருக்க முடியும். ஆனால், ஒரு கட்டளை தொடர்பான குறிப்பு இல்லாதிருந்து வருவதன் காரணத்தினால் இந்த ஒழுங்குவிதிகளின் தொகுப்புக்கு ஊடாக இது தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

**தனிப்பட்ட சேவைகளை பெற்றுக் கொள்ளல் என்றால் என்ன?**

ஒழுங்குவிதிகள் பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: *'ஓர் அத்தியாவசிய சேவையை பேணுவதற்கென உதவுவதற்கு அல்லது அது தொடர்பில் ஏதேனும் பணியை புரிவதற்கு அல்லது ஏதேனும் தனிப்பட்ட சேவையை வழங்குவதற்கு தமது கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் எவரேனும் ஆளை பணிக்கும் படி அதற்கென தீர்மானிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளை அல்லது அலுவலர்களை ஜனாதிபதி பணிக்கலாம் அல்லது அவர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்* [ஒழுங்குவிதி 13(1)ஐப் பாரக்கவும்]. இது உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் 2019ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அவசர கால ஒழுங்குவிதி 10 இற்கு இணையானதாகும்.

எனவே, ஓர் அத்தியாவசிய சேவையை பராமரிப்பது தொடர்பாக அல்லது ஏதேனும் தனியார் சேவையை வழங்குவதற்கென ஏதேனும் ஒரு வேலையை செய்யுமாறு ஒரு தனிநபர் பணிக்கப்பட முடியும். 2019 இன் அவசரகால ஒழுங்குவிதிகளைப் போலன்றி, தற்போதைய ஒழுங்குவிதிகளில் 'கட்டளை' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளையில், அத்தகைய ஒரு கட்டளைக்கு இணங்கி ஒழுகத் தவறுதல் ஒரு தவறாக கருதப்பட முடியும்.

**அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்**

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஜனாதிபதியினால் [ஒழுங்குவிதி 9(1)ஐப் பார்க்கவும்] நியமனம் செய்யப்படுவதுடன், பிரதி அல்லது உதவி ஆணையாளர்களை நியமனம் செய்வற்கான அதிகாரத்தையும் [ஒழுங்குவிதி 9(2)ஐப் பார்க்கவும்], தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை, கடமைகளை அல்லது கருமங்களை அவர்களுக்கு கையளிப்பதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளார் [ஒழுங்குவிதி 9(3)ஐப் பார்க்கவும்]. தற்போதைய ஒழுங்குவிதி 9, 2005ஆம் ஆண்டின் அவசரகால ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 9 I ஒத்ததாகும். ஆனால், முழுவதும் அதேபோல அது இருந்து வரவில்லை. அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பது சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் அமுல் செய்வதும், ஒருங்கிணைப்பதும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் கடமையாக இருந்து வருகின்றது. அவ்வாறு செய்யும் பொழுது, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் விரிவான அதிகாரங்களைக் கொண்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும்

ஏதேனும் அதிகாரங்கள், ஒழுங்குவிதி 11 இன் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், ஒழுங்குவிதி 12 இன் கீழ் (அந்த ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்குகென) தகுதி வாய்ந்த அதிகாரிக்கென வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அல்லது ஒழுங்குவிதி 13 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் என்பவற்றை அவர் பிரயோகிக்கக் கூடியவராக இருந்து வருகின்றார் [ஒழுங்குவிதிகள் 9(4)ஐப் பாரக்கவும்].

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தனது கருமங்களை மேற்கொள்ளும் பொழுது ஒழுங்குவிதி 12 இன் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு ஒரு பணிப்புரையை வழங்க முடியும் அல்லது ஒழுங்குவிதி 13 இன் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும் எவரேனும் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு பணிப்புரைகளை வழங்க முடியும்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கருமங்கள் ஒழுங்குவிதிகளில் தெளிவான விதத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கவில்லை.

## அத்தியாவசிய சேவைகள் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் பாகம் II

### இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு அத்தியாவசிய சேவை என்றால் என்ன?

ஒழுங்குவிதிகளின் பாகம் II, ‘அத்தியாவசிய சேவைகள்’ தொடர்பாக குறிப்பிடுகின்றது. அத்தியாவசிய சேவைகள் என்ற பதத்திற்கு பின்வரும் விதத்தில் வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது: *‘ஜனாதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பொதுப் பயன்பாட்டுச் சேவை அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஏதேனும் சேவை என்று பொருள் ஆகும் என்பதுடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை அல்லது அதன் கிளையையும் உள்ளடக்கும். அத்துடன் இவ் ஒழுங்குவிதிகளின் 10ஆம் ஒழுங்குவிதிகளின் படி அதன் பின்னர் வெளிப்படுத்தக்கூடிய ஏதேனும் சேவையையும் உள்ளடக்கும்”* [ஒழுங்குவிதிகள் 3].

ஒழுங்குவிதிகளின் அட்டவணை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: *‘பொது மக்களின் நாளாந்த வாழ்க்கையை உரிய முறையில் பேணுவதற்குத் தேவைப்படும் நெல், அரிசி மற்றும் சீனி போன்ற அத்தியாவசிய பாவனையாளர் பொருட்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், சுத்திகரித்தல், இடம்பெயர்த்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான ஏதேனும் சேவையை புரிவதற்கு தேவைப்பட்ட வேலையாளர்களை அல்லது தொழிலாளர்களை தொழிலுக்கு அமர்த்துதல்.’*

வரைவிலக்கணம் ஒழுங்குவிதி 10 தொடர்பாக குறிப்பிடும் அதே வேளையில், சம்பந்தப்பட்ட இந்த ஒழுங்குவிதி ஒரு சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதற்கென ஜனாதிபதிக்கு ஏதேனும் மேலதிக அதிகாரங்களை வழங்குவதாக தெரியவில்லை. இந்தப் பிரிவு ஓர் அத்தியாவசிய சேவை, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஒரு சேவையாக இருந்து வர வேண்டும் என்ற ஒரு தேவையையும் குறிப்பிடுகின்றது.

எனவே, இந்த ஏற்பாடுகளை சேர்த்து வாசிக்கும் பொழுது, அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிரும் வகைகளுக்குள் வரும் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே இந்த ஒழுங்குவிதிகளை பிரயோகிக்க முடியும் என்பது தெரிகிறது. அதாவது, குறித்துரைக்கப்பட்ட அத்தியாவசிய நுகர் பொருட்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், சுத்திரிகரித்தல், போக்குவரத்துச் செய்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கென அவை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இவற்றை பிரயோகிக்க முடியும். சம்பந்தப்படாத ஒரு சேவையை ஓர் அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்வதற்கான ஒரு முயற்சி ஒழுங்குவிதிகளை மீறுவதாகவே இருந்து வரும்.

இது 2005 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகளுக்கு முரணானதாகும். அதில் ஒழுங்குவிதி 40 இன் மூலம் ஒரு வர்த்தமானியின் மூலம் ஜனாதிபதி அந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்கென எந்தவொரு சேவையையும் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த முடியும். அந்த வகையில் தற்போதைய

ஒழுங்குவிதிகளின் பிரயோகம் குறுகியவையாக இருந்து வருவது போல் தெரிகின்றது.

**இந்த ஒழுங்விதிகளின் கீழ் ஒரு சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய விளைவு என்ன?**

ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதன் காரணமாக இரண்டு முக்கியமான விளைவுகள் தோன்ற முடியும்.

**முதலாவது விளைவு** 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதிக்குப் பின்னர் ஏதேனும் ஒரு கடமையில் ஈடுபட்டிருக்கும் அல்லது அத்தகைய அத்தியாவசிய சேவை ஒன்றில் தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கும் ஆட்களுக்கு பொருந்துகின்றது.

அத்தகைய ஆட்கள், ஏனையவற்றுக்கு மத்தியில், வேலைக்கு சமூகமளிப்பதற்கு தவறினால் அல்லது மறுத்தால், வேலை செய்யத் தவறினால் அல்லது தமது வேலையிடத்திலிருந்து வெளியேறிச் சென்றால், சேவையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றின் பிரகாரம் தமது கடமைகளை நிறைவேற்றாதுவிட்டால் அல்லது வேலை செய்யத் தவறினால் [ஒழுங்குவிதிகள் 10(1)(a)] அவர்களுடைய வேலை உடன் முடிறுத்தப்பட்டிருப்பதாக அல்லது சேவையிலிருந்து ராஜிநாமா செய்திருப்பதாக கருதப்படும். அத்துடன், சமூகமளிக்காமை அல்லது வேலை செய்ய மறுப்புத் தெரிவித்தல், ஒரு வேலை நிறுத்தத்திற்கு அல்லது ஒழுங்கமைந்த ஒரு நடவடிக்கைக்கு தூண்டுதல் அளித்தல் காரணமாக ஏற்பட்டிருந்தாலும் கூட, ஒரு தவறு தொடர்பாக அவர் மீது குற்றத் தீர்ப்பு வழங்கப்படும்.

அது தவிர ஜனாதிபதி எந்தவொரு அத்தியாவசிய சேவையையும் 'குறித்துரைக்கப்பட்ட ஒரு சேவையாக' பிரகடனம் செய்ய முடியும். அவ்விதம் செய்யப்படும் பொழுது, ஊழியர்கள் சாதாரண வேலை நேரங்களுக்கு அப்பால் அல்லது விடுமுறை நாட்களில் வேலை செய்ய வேண்டிய தேவை ஏற்படும். பணிப்புரை வழங்கப்பட்டிருக்கும் விதத்தில் அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் அதே பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் [ஒழுங்குவிதிகள் 10(1)(b)].

**இரண்டாவது விளைவு** எவரேனும் ஆள் ஒருவர், ஏனையவற்றுடன் இணைந்து, அத்தகைய சேவை ஒன்றின் பராமரிப்புக்கு அல்லது தனது பணியிடத்திற்கு செல்லும் ஆளொருவருக்கு இடையூறு விளைவித்தால், தடை ஏற்படுத்தினால், தாமதம் விளைவித்தால் வேலைக்கு சமூகமளிக்கக் கூடாது என, வேலையை விட்டுச் செல்லுமாறு (உண்மையில் அவர்கள் அத்தகைய சேவைகளை விட்டுச் செல்லாதிருந்தாலும்) ஊக்கமளித்தால் அல்லது (அவர்கள் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில்) ஓர் இணையான சேவையை உருவாக்கினால் அல்லது தொழிலை ஏற்றுக்கொள்வதை அல்லது வழங்குவதனை தடுத்தால் ஒரு தவறுக்கு தவறாளியாக ஆக்கப்படுவார்கள் [ஒழுங்குவிதிகள் 10(2)(a)]. அந்த ஊக்குவித்தல் மற்றும் தூண்டுதல் ஏதேனும் ஒரு செய்கை, பேச்சு அல்லது கட்டுரையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் இது பொருந்தும் [பார்க்கவும் ஒழுங்குவிதிகள் 10(2)(b)].

'ஊக்குவித்தலை' அல்லது 'தூண்டுதலை' நிரூபிப்பதற்கான தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுகோல் என்ன என்பது தெளிவற்றதாக இருந்து வருகின்றது. ஓர் அத்தியாவசிய சேவையின் செயற்பாட்டினை விமர்சிக்கும் ஒரு பேச்சு அல்லது கட்டுரை கூட அதனை நிகழ்த்தியவரை/ எழுதியவரை ஒரு தவறிழைத்தவராகக் கருத முடியும்.

**ஏற்கனவே இருந்து வரும் சட்டங்களின் கீழ் அத்தியாவசிய சேவைகளை பிரகடனம் செய்திருக்க முடியுமா?**

அவசரகால நிலை மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் விரிவான அதிகாரங்கள் என்பன குறித்த இலங்கையின் கடந்த கால அனுபவத்தை கவனத்தில் எடுக்கும் பொழுது, அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது ஏன் மற்றும் இலங்கையின் அரசியல்யாப்பு ஜனநாயகத்திற்கு பாதிப்புக்களை எடுத்துவரக் கூடிய விதத்தில் உரிமைகளை ஒடுக்குவதற்கு பொருளாதார

நியாயப்படுத்தல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா போன்ற கேள்விகள் எழுப்பப்பட வேண்டும். அவசர கால நிலையை பிரகடனம் செய்யாத விதத்திலும், அவசரகால ஒழுங்குவிதிகளை அமுலுக்கு விடாத விதத்திலும் குறிப்பிட்ட நிலவரங்களை எதிர்கொள்வதற்கு நிவாரணம் அளிக்கக்கூடிய சட்டங்களை இலங்கை ஏற்கனவே கொண்டிருக்கும் பின்புலத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் இக்கேள்விகளை எழுப்புகின்றது.[8]

குறிப்பாக, பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17, குறிப்பிட்ட சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் சேவைகளை, அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்வதற்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. அவசரகால நிலைமையை பிரகடனம் செய்யாமல் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி இந்த அதிகாரங்களை பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்து வருகின்றார் என்ற விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். இந்தப் பிரிவு சட்டத்துடன் பல பொருத்தப்பாடுகளை கொண்டிருந்த போதிலும், இந்த ஏற்பாடுகள் ஒரே மாதிரியானவை அல்ல. அவசரகால ஒழுங்குவிதிகளை பரவலான விதத்தில் பிரயோகிக்க முடியும். இது தொடர்பான நான்கு முக்கியமான வேறுபாடுகள் வருமாறு:

i. பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கத்தினால் ஒரு கைத்தொழில் தகராறு தொடர்பாக ஏற்பாடு செய்யப்படும் ஒரு வேலை நிறுத்தம் தொடர்பாக வேலை செய்வது நிறுத்தப்பட்டால் அது ஒரு தவறாக கருதப்பட மாட்டாது.
ii. ஆளொருவர் 'தூண்டப்பட்டிருக்க' வேண்டும் அல்லது 'ஊக்குவிக்கப்பட்டிருக்க' வேண்டும் என்பதனை இந்த ஒழுங்குவிதிகள் அவசியப்படுத்தும் அதே வேளையில், பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் இது தொடர்பாக உயர் தராதரம் ஒன்றை அவசியப்படுத்துகின்றது. அதன் பிகாரம், 'ஆள் மீதான அல்லது சொத்து மீதான வன்முறையின் மூலம் அல்லது பேச்சு மூலமான, எழுத்து மூலமான அச்சுறுத்தல் மூலம் அது யாருக்கு விடுக்கப்படுகின்றதோ அவருக்கு ஏதேனுமொரு வகையிலான அச்சுறுத்தலாக அல்லது அவதூறாக அல்லது ஏதேனும் ஒரு களங்கத்தை விளைவிப்பதாக அல்லது வேறு ஏதேனும் வழிகளில் இருந்து வருதல் வேண்டும்'.
iii. அவர்கள் வேலைக்கு வராதிருந்தமை சுகயீனம் காரணமாக அல்லது போக்குவரத்தின்மை காரணமாக இருந்து வந்தது என ஊழியர்கள் காரணம் காட்டுவதற்கான ஏற்பாட்டினை பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் வெளிப்படையாகவே கொண்டுள்ளது. ஆனால், இந்த ஒழுங்குவிதிகள் அத்தகைய ஓர் ஏற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.
iv. ஓர் அத்தியாவசிய சேவையை 'ஒரு குறித்துரைக்கப்பட்ட சேவையாக' பிரகடனம் செய்து, வழமையான வேலை நேரங்கள் மற்றும் விடுமுறை தினங்கள் அதற்குப் பொருந்தாது எனக் குறிப்பிடும் ஒழுங்குவிதிகளுக்கு இணையான ஒரு ஒழுங்குவிதியை பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் கொண்டிருக்கவில்லை.

மேலும், ஒழுங்குவிதி 10, 2005 ஆம் ஆண்டின் அவசரகால ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 40 இற்கு இணையான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானிக்கும் அதே வேளையில், அது 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் ஏற்பாடுகளையும் கணிசமான அளவில் ஒத்தவையாக இருந்து வருகின்றது.[9] எனவே, அவசரகால ஒழுங்குவிதிகளை பிரகடனம் செய்வதற்குப் பதிலாக, இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்க முடியாதா என்ற கேள்வியை எழுப்புவது நியாயமானதாகும்.

[8] CPA has previously commented on alternate laws that could have been used in responding to the Covid-19 pandemic. – 'Brief Guide II- Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', Centre for Policy Alternatives', April 2020. https://www.cpalanka.org/wpcontent/uploads/2020/04/FINAL-Presidential-Task-Force-on-COVID19-April-2020-copy.pdf

[9] One difference being that under the Act there is no provision to consider the employee as having resigned or their services being terminated

## முடிவுரை

இந்த அவசரகால ஒழுங்குவிதிகளுக்கு ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதீத அதிகாரங்கள், ஒழுங்குவிதிகளினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் திட்டவட்டமான நோக்கங்களுக்கு மட்டும் முழுமையாக பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும் என்ற விடயத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது.[10] மேலும், அவசரகால ஒழுங்குவிதிகள், கடுமையான நெருக்கடிகள் இடம்பெற்றுவரும் காலப் பிரிவின் போது அரசாங்கத்திற்கு அதீதமான அதிகாரத்தை தற்காலிகமாக வழங்குவதற்கான ஒரு காரணமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது. அது "சாதாரண சட்டத்தின் ஆட்சிக்கு" ஒரு மாற்றீடாக கருதப்படக் கூடாது. எனவே, அவசரகால நிலை வரையறுக்கப்பட்ட ஒரு காலப் பிரிவுக்கு மட்டுமே வலுவில் இருந்து வருதல் வேண்டும். மேலும், போட்டிக்கு எதிரான நடைமுறைகளை தடுப்பதற்கும் போதிய பாதுகாப்புகளுடன் கூடிய சட்டங்கள் இருந்து வருவதனை அரசாங்கம் உத்தரவாதப்படுத்துதல் வேண்டும். அவசரகால ஒழுங்குவிதிகளின் பாவனை, வினைத்திறன் மிக்க நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கான ஒரு பதிலீடாகவோ அல்லது சட்ட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் வேறு ஏதேனும் படிமுறைகளுக்கான ஒரு பதிலீடாகவோ இருந்துவரக் கூடாது. இறுதியாக, எதிர் கருத்துக்களை ஒடுக்குதல், சிவில் சுதந்திரங்களை தடுத்தல் மற்றும் இலங்கையின் அரசியல் யாப்பு ரீதியான ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் விடுத்தல் என்பவற்றுக்கான எவையேனும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுமிடத்து, அவற்றை உன்னிப்பாக அவதானித்து, ஜனநாயக ரீதியில் அவற்றுக்கு சவால் விடுவது அனைத்து பிரஜைகளினதும் ஒரு பொறுப்பாக இருந்து வருகின்றது.

---

[10] Namely to "to prevent the hiding, interrupting the distribution, charging high prices of especial food bulks including rice and sugar and causing market irregularities"